Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 100 | உள்ளூர் - 10.04.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 100 | வெளியூர் - 11.04.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


முடிவுக்கு வரும் சனி அஸ்தமனம் - இந்த ராசிகள் கவனம்!

10-ம் வகுப்பு.. மத்திய சுங்கத்துறையில் வேலை..!

இணையத்தில் வெளியான "ஜன நாயகன்"

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## ஹார்முஸ் ஜலசந்தியில் கடல் கண்ணிவெடிகள் -பதற்றம்!

துபாய், ஏப். 10–

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில், ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் கடல் கண்ணிவெடிகளைப் பதித்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதுதொடர்பான வரைபடம் ஒன்றை அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. இது அப்பிராந்தியத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





ஈரானின் புரட்சிகர காவல்படையுடன் நெருங்கிய தொடர்புடைய 'இஸ்னா' மற்றும் 'தஸ்னிம்' ஆகிய செய்தி நிறுவனங்கள் கடல் கண்ணிவெடிகள் தொடர்பான வரைபடத்தை நேற்று வெளியிட்டன. பாரசீக வளைகுடாவின் குறுகிய நுழைவுப் பகுதியான ஹார்முஸ் ஜலசந்தியில், கப்பல்கள் வழக்கமாகப் பயணிக்கும் பாதையை 'ஆபத்தான பகுதி' என பாரசீக மொழியில் அந்த வரைபடத்தில் எழுதப்பட்டுள்ளது.

## நாகர்கோவிலில் பிரதமர் மோடி ரோடு ஷோ: நயினார் நாகேந்திரன் தகவல்!

கன்னியாகுமரி, ஏப். 10–

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் செய்தியாளர்களை சந்தித்த தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியதாவது:

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பிலிருந்து வடசேரி எம்.ஜி.ஆர். சிலை வரை ரோடு ஷோ மூலம் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இதற்கான நாள், நேரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த எழுச்சிமிகு பயணத்தில் கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் பெருமளவில் பங்கேற்பார்கள்.





இந்தத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 180–க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும்.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் தென் மாவட்ட சுற்றுப்பயணத்தால் அரசியலில் புதிதாக எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது பிரசாரத்தில் பா.ஜ.க.வை மட்டுமே அதிகம் விமர்சிக்கிறார். இது பா.ஜ.க.வின் வளர்ச்சியைக் கண்டு அவர் கொண்டுள்ள பயத்தையே காட்டுகிறது.

மெட்ரோ ரெயில் திட்டம் குறித்து பேசிய அவர், "தமிழக அரசு முறையான விரிவான திட்ட அறிக்கையைக் கொடுக்காததே மெட்ரோ ரெயில் திட்டம் தாமதமாகக் காரணம். சாத்தான்குளம் வழக்கில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு சட்டப்படியானது; அதற்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த பேட்டியின்போது நாகர்கோவில் தொகுதி வேட்பாளர் எம்.ஆர்.காந்தி, மாவட்ட தலைவர் கோபகுமார், மாநில செயற்குழு உறுப்பினர் உமாரதிராஜன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## மெட்ரோ ரெயிலில் பயணம் செய்து வாக்கு சேகரித்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஏப். 10–

தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் பிரசாரம், வாக்குசேகரிப்பு உள்பட பல்வேறு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், திமுக தலைவரும், முதல்–அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று சென்னை மெட்ரோ ரெயிலில் பயணித்து வாக்கு சேகரித்தார். சென்னை சென்டிரலில் இருந்து தேனாம்பேட்டை வரை மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தார். அப்போது அரசின் நலத்திட்டங்கள் குறித்து பயணிகளுடன் கலந்துரையாடி, வாக்கு சேகரித்தார். பின்னர் மெட்ரோ வளாகத்தில் முதல்–அமைச்சருடன் பயணிகள் கலந்துரையாடி செல்பி எடுத்துக் கொண்டனர். இதனிடையே, முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மாலை தஞ்சையில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளார். அவர் தஞ்சையில் உள்ள 8 தொகுதிகளை சேர்ந்த திமுக, கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.



## பள்ளிகளுக்கு கோடை விடுமுறை /திறப்பு?

சென்னை, ஏப். 10–

தமிழக பள்ளிகளுக்கு கோடை விடுமுறை ஏப்ரல் 17, 2026 முதல் தொடங்குகிறது. பள்ளிகள் மீண்டும் ஜூன் 1, 2026 அன்று திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.





**முக்கிய தகவல்கள்**

விடுமுறை தொடக்கம்: ஏப்ரல் 17, 2026

விடுமுறை முடிவு: மே 31, 2026

பள்ளிகள் திறப்பு: ஜூன் 1, 2026

வகுப்புகள்: 1 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

**தேர்வுகள்:** ஆண்டு இறுதி தேர்வுகள் ஏப்ரல் 16, 2026 அன்று நிறைவடைகின்றன.

**புதிய கல்வியாண்டு மாற்றங்கள்**

மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறது.

புதிய பாடநூல்கள் சீரமைக்கப்பட்ட பாடத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

**பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு முக்கிய குறிப்புகள்**

விடுமுறை காலம்: மொத்தம் 48 நாட்கள் (ஏப்ரல் 17 மே 31).

வெப்பநிலை மற்றும் தேர்தல் பணிகள் காரணமாக விடுமுறை முன்னதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**புதிய கல்வியாண்டு:** ஜூன் 1 முதல் தொடங்கும், அதற்கான பாடநூல்கள் மற்றும் பாடத்திட்டம் பள்ளிகளில் வழங்கப்படும்.

## சலுகை விலை சதுரங்கம்

# அமெரிக்கா தடை விதித்த LNG

### 40% தள்ளுபடியில் விற்கும் ரஷ்யா!

அமெரிக்கா, ஏப். 10–

உலகளவில் இயற்கை எரிவாயு பற்றாக்குறை நிலைமை நிலவுவதால், எரிவாயு சந்தையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை பயன்படுத்தி, தென் ஆசிய நாடுகளை கவர ரஷ்யா புதிய முயற்சி எடுத்துள்ளது. அமெரிக்கா தடை விதித்த தனது LNG (திரவ இயற்கை எரிவாயு) ஏற்றுமதியை, சந்தை விலையை விட சுமார் 40% தள்ளுபடியில் வழங்க ரஷ்யா முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. இந்த LNG சரக்கு கள், சீனா மற்றும் ரஷ்யாவை சேர்ந்த இடைத்தரகர்கள் மூலம் வழங்கப்படுகின்றன. மேலும், இந்த எரிவாயு ஓமன் அல்லது நைஜீரியா போன்ற நாடுகளில் இருந்து வந்தது போல காட்ட சட்டவிரோத சலுகைகளுடன் போலி ஆவ ணங்களையும் அவர்களே வழங்குவதாகக் கூறப்படு கிறது.



**ஹோர்முஸ் கடல்சந்தி தாக்கம்**

ஹோர்முஸ் கடல்சந்தி மூடப்பட்ட நிலையும், கத்தார் நாட்டில் உள்ள LNG ஏற்றுமதி நிலையங்கள் மீது தாக்குதல் நடந்ததாலும், உலகளாவிய எரிவாயு விநியோகத்தில் சுமார் 20% பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விலைகள் அதிகரித்துள்ளன.

**இந்தியா, வங்காளதேசம் பாதிப்பு**

இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள், கத்தாரில் இருந்து LNG கிடைக்காததால் அதிக விலைக்கு மாற்று வழிகளை தேட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு வங்காளதேசம் தனது LNG தேவையின் 60% ஐ கத்தாரில் இருந்து பெற்றிருந்தது. தற்போது அது ஸ்பாட் மார்க்கெட்டில் வாங்க வேண்டியதால், முன் ஒப்பந்தத்தை விட இரட்டிப்பு செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், LNG விநியோகம் குறைந்ததால், இந்தியா மற்றும் வங்காளதேசம் உரத் தொழிலுக்கு (fertilizer sec–tor) வழங்கும் எரிவாயுவையும் குறைத்துள்ளன.

**இந்தியாவின் நிலைப்பாடு**

இந்தியா பொதுவாக அமெரிக்கா தடை விதித்த எரிசக்தி பொருட்களை இறக்குமதி செய்வதில் எச்சரிக்கையாக இருக்கும். முன்பு, கருப்புப் பட்டியலில் உள்ள ரஷ்ய LNG திட்டங்களில் இருந்து வாங்கமாட்டோம் என தெரிவித்துள்ளது.

**ரஷ்யாவின் திட்டம்**

ரஷ்யா தனது Arctic LNG 2 மற்றும் Portovaya போன்ற திட்டங்களில் இருந்து ஏற்றுமதியை அதிகரிக்க முயற்சி செய்கிறது. ஆனால், அமெரிக்காவின் எதிர்வினை பயத்தால் பல நாடுகள் இந்த LNG வாங்க தயங்குகின்றன.

தற்போது, சீனா மட்டுமே இந்த தடை விதிக்கப்பட்ட ரஷ்ய LNG–ஐ வாங்கி வருகிறது. இதை மற்ற நாடுகளுக்கும் விரிவாக்க முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது. உலக எரிவாயு சந்தையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை பயன்படுத்தி, சட்டவிரோத சலுகைகளை வழங்கி தென் ஆசியாவில் புதிய வாடிக்கையாளர்களை பெற ரஷ்யா முயற்சி செய்கிறது. ஆனால், அரசியல் மற்றும் பொருளாதார தடைகள் காரணமாக இந்த முயற்சி எவ்வளவு வெற்றியடையும் என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை.

## முதல்முறை ஜனநாயகன் பற்றி பேசிய விஜய்.. அடுத்த நாளே இணையத்தில் படம்! பின்னணியில் யார்?

சென்னை, ஏப். 10–

விஜயின் கடைசி படமான ஜனநாயகன் திரைப்படத்தின் காட்சிகள் இணையத்தில் கசிந்து ரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக திருநெல்வேலி பிரச்சாரத்தின் போது விஜய் முதல்முறையாக ஜனநாயகன் திரைப்படத்தை முடக்கியது குறித்து பேசிய அடுத்த நாளே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது விஜய் ஆதரவாளர்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.




ஜனநாயகன் படத்தின் பல்வேறு காட்சி மற்றும் பாடல் காட்சி இணையத்தில் பரவலாக ஷேர் செய்யப்பட்டு வருகிறது. வாட்ஸ் அப் , டெலிகிராம் , ஃபேஸ்புக் , எக்ஸ் என அனைத்து சமூக வலைதளங்களில் ஜனநாயகன் படத்தின் காட்சிகள் கசிந்துள்ளன. 3 மணி நேர ஜனநாயகன் படத்தை ஒரு நபர் செல்ஃபோனில் வைத்திருப்பதாகவும் அதில் இருந்து சில காட்சிகளை மட்டும் அந்த நபர் தற்போது வெளியிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த காட்சிகளை வெளியிட்ட நபரை கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே நேரம் இந்த காட்சிகளை சமூக வலைதளத்தில் பகிர்பவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என படக்குழு சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தசூழலில் தற்போது முழுத் திரைப்படமும் லீக் செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. சென்சார் பிரச்சனையால் ஜனநாயகன் படத்தின் ரிலீஸ் தடைபட்டபோது விஜய் ரசிகர்கள் அனைவரும் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால் விஜய் ஜனநாயகன் படத்தின் ரிலீஸ் தடைபட்டது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் காத்தது பல்வேறு விமர்சனங்களுக்கு வழி வகுத்தது. ஜனநாயகன் படம் குறித்து விஜய் முதல்முறையாக பேசியது கடந்த 8ஆம் தேதி திருநெல்வேலி பிரச்சாரத்தின் போது தான். அப்பிரச்சாரத்தில் ஜனநாயகன் குறித்து விஜய் பேசியதாவது, "ஜனநா யகனை முடக்கு. படத்தை முடக்கின பையன் டிஸ்டர்ப் ஆகிடுவான். அதுனால படத்தை முடக்கினாங்க. யாரு முடக்குனாங்கனு உங்களுக்கேத் தெரியும். அது நான் சொல்லித் தெரியனும்னு அவசியம் இல்லை. என்னடா இவன், படத்தை முடக்குனாலும் அவன் பாட்டுக்கு அவன் வேலையை பாத்துட்டு போறான். அதுவும் எடுபடல." என திருநெல்வேலியில் அவர் பேசினார். அவர் பேசிய அடுத்த நாளே ஜனநாயகன் பட காட்சிகள் இணையத்தில் கசிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில் வெளியிடப்பட்ட படத்தின் காட்சிகளில் FOR EDIT எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியிருக்கும் நிலையில், படக்குழுவுக்கு சம்பந்தப்பட்ட நபரே வெளியிட்டாரா அல்லது வேறு யாரேனும் பின்னணியில் இருக்கிறார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.

## நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா!



புதுடெல்லி, ஏப். 10–

இன்று (10 ஏப்ரல் 2026) நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா செய்துள்ளார். அவர் மீது கடந்த ஆண்டு டெல்லி அரசு இல்லத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பணம் தொடர்பான விசாரணை நடந்து கொண்டிருந்த நிலையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடம் தனது ராஜினாமாவை சமர்ப்பித்துள்ளார்.

தலையங்கம் மதுரை மணி
வெள்ளிக்கிழமை 10.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 27-ம் தேதி

# "ஒரு பூமி போதாது" இரண்டு பூமிகள் தேவை..!



பூமியின் இயற்கை வளங்களை மனிதர்கள் அதிக வேகத்தில் பயன்படுத்தி வருவதால், தற்போதைய வாழ்க்கை முறை நீடிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக சமீபத்திய ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி இதழில் வெளியான இந்த ஆய்வு, பூமியின் மீளுருவாக்க திறனை விட 70 முதல் 80 சதவீதம் அதிகமாக வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது.

இதனால், மனிதர்கள் தற்போது வாழும் வாழ்க்கை முறையை தொடர சுமார் 1.7 முதல் 1.8 பூமிகள் தேவைப்படும் என ஆய்வு கூறுகிறது. எளிமையாகச் சொன்னால், பூமி வழங்கக்கூடியதை விட அதிகமாக மனிதகுலம் பயன்படுத்தி வருகிறது.

இந்த ஆய்வை ஃபிளிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த சுற்றுச்சூழல் விஞ்ஞானி கோரி பிராட்ஷா தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 200 ஆண்டுகளின் மக்கள்தொகை மற்றும் நுகர்வு தரவுகளை ஆய்வு செய்ததில், முந்தைய காலங்களில் மனித தேவைகள் மற்றும் இயற்கை வளங்களுக்கு இடையில் சமநிலை இருந்தது தெரியவந்துள்ளது.

ஆனால் 1950களுக்குப் பிறகு தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் அதிகரித்த நுகர்வு காரணமாக இந்த சமநிலை முற்றிலும் மாறியது. இதுவே சுற்றுச்சூழலுக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்திய முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. மேலும், உலக மக்கள்தொகை 20602070 காலகட்டத்தில் 11.7 முதல் 12.4 பில்லியன் வரை உச்சத்தை அடையலாம் என ஆய்வு கணிக்கிறது. இருப்பினும், இது நிலையான வளர்ச்சியாக இருக்காது என்றும் விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

இந்த நிலையை 'சூழலியல் கடன்' (Ecological Debt) என அழைக்கப்படுகிறது. இதன் விளைவாக காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு, காடழிப்பு மற்றும் இயற்கை வளங்களின் குறைவு போன்ற பிரச்சினைகள் தீவிரமடையும் அபாயம் உள்ளது. நிலையான உலக மக்கள்தொகை சுமார் 2.5 பில்லியன் அளவில் இருந்தால் மட்டுமே சுற்றுச்சூழல் சமநிலை பேண முடியும் என ஆய்வு தெரிவிக்கிறது. அதேசமயம், மக்கள் தொகை அளவை விட நுகர்வு பழக்கவழக்கங்களே அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், வளங்களை சிக்கனமாக பயன்படுத்துதல், கழிவுகளை குறைத்தல் மற்றும் நிலையான வாழ்க்கை முறையை கடைப்பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் அவசியம் என விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர். எதிர்காலத்தில் மனித குலத்தின் நலனும், பூமியின் நிலைத்தன்மையும் அடுத்த சில ஆண்டுகளில் எடுக்கப்படும் முடிவுகளிலேயே அமையும் என ஆய்வு தெளிவுபடுத்துகிறது.

# மும்மொழிக் கொள்கையை அடுத்த ஒரு வாரத்தில் செயல்படுத்த பள்ளிகளுக்கு சிபிஎஸ்இ உத்தரவு!




புதுடெல்லி, ஏப். 10–

சி.பி.எஸ்.இ. நிர்வாகம், கல்வி முறையில் பல்வேறு அதிரடி மாற்றங்களை கொண்டு வந்து கொண்டே இருக்கிறது. அந்தவரிசையில் தற்போது புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, 2026–27–ம் கல்வியாண்டு முதல் புதிய தேசிய கல்விக் கொள்கையின்படி, 6–ம் வகுப்பு முதல் மும்மொழி கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் என்றும், 9–ம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம், அறிவியல் பாடங்களில் நிலையான மற்றும் விருப்பத்தேர்வான மேம்பட்ட நிலைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதில் மும்மொழிக் கொள்கையில் புதிய தேசிய பாடத்திட்ட கட்டமைப்பின்படி, மாணவர்கள் படிக்கும் 3 மொழிகளில் குறைந்தபட்சம் 2 மொழிகள் இந்தியமொழிகளாக இருக்க வேண்டும். பல மொழி சார்ந்த கல்வியை வாரியம் படிப்படியாக செயல்படுத்தி வருவதன் தொடர்ச்சியாக 2026–27–ம் கல்வியாண்டு முதல் 6–ம் வகுப்பு மாணவர்களுக்கு 3–வது மொழி கட்டாயமாக்கப்படும் என்றும், இதன் மூலம் ஒவ்வொரு மாணவரும் குறைந்தது 2 இந்திய மொழிகளையாவது கற்பது உறுதி செய்யப்படும் என கூறப்பட்டிருக்கிறது.

இந்த நடைமுறையில், வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் படித்துவிட்டு திரும்பும் மாணவர்கள், 8, 9–ம் வகுப்பு வரை தாங்கள் படித்த 3–வது மொழி உள்நாட்டுப்பள்ளிகளில் கற்பிக்கப்படாமல் இருந்தால், அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, அந்த மாணவர்களுக்கு மட்டும் விலக்கு வழங்கப்படலாம். இருப்பினும் அவர்கள் கல்வித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த பாடங்களின் எண்ணிக்கையை முழுமையாககற்பது கட்டாயம் ஆகும் என சி.பி.எஸ்.இ. அதிகாரிகள் தெரிவித்து இருக்கின்றனர். இதேபோல், 9–ம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம், அறிவி யல் பாடங்களில் இருநிலை தேர்வு முறை அறிமுகப்படுத்தப்படுவது பற்றிய விளக்கத்தையும் சி.பி.எஸ்.இ. தெரிவித்துள்ளது. அதில், முதலாவது தரநிலை (ஸ்டேன்டர்டு) பாடத்திட்டத்தை படித்து 80 மதிப்பெண்களுக்கான 3 மணி நேர பொதுத் தேர்வை அனைத்து மாணவர்களும் கட்டாயம் எழுத வேண்டும்.

இதில் கூடுதல் திறன் பெற விரும்பும் மாணவர்கள், கணிதம் மற்றும் அறிவியல் அல்லது இரண்டு பாடங்களிலும் மேம்பட்ட நிலையை (அட்வான்ஸ்டு) தேர்வு செய்யலாம். இது விருப்பத்தேர்வுதான். இதற்காக 25 மதிப்பெண்களுக்கு ஒரு மணி நேரம் தேர்வு நடத்தப்படும். அதில் பெறும் மதிப்பெண்கள் ஒட்டுமொத்த தொகுப்பு மதிப்பெண்ணுடன் சேர்க்கப்படாது.

மாறாக 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெறும் மாணவர்களின் மதிப்பெண் தாளில் 'மேம்பட்ட நிலைத் தகுதி' என குறிப்பிடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டமைப்பின் கீழ் 10–ம் வகுப்புக்கும் முதல் பொதுத் தேர்வுகள் 2028–ம் கல்வியாண்டில் இருந்து நடத்தப் படும் எனவும் சி.பி.எஸ்.இ. கூறியிருக்கிறது.

இந்த நிலையில், மும்மொழிக் கொள்கையை அடுத்த ஒரு வாரத்தில் செயல்படுத்த வேண்டும் என பள்ளிகளுக்கு சிபிஎஸ்இ உத்தரவிட்டுள்ளது. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் மொழிப்பாட புத்தகங்களுக்கு காத்திருக்காமல், 6ம் வகுப்புகளில் 3–வது மொழிப்பாடத்தை உடனடியாக பயிற்றுவிக்க தொடங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் படிப்படியாக 2030–31க்குள் 10ம் வகுப்பு வரை இக்கொள்கையை கட்டாயமாக்க சிபிஎஸ்இ திட்டமிட்டுள்ளது.

# ஹோர்முஸ் கடல்சந்தி கடக்க 'பிட்காயின்', சீன யுவான் கேட்கும் ஈரான்?




அமெரிக்கா, ஏப். 10–

அமெரிக்காஈரான் இடையிலான தற்காலிக போர்நிறுத்தத்துக்கு இடையே, ஹோர்முஸ் கடல்சந்தியை கடக்கும் கப்பல்களிடமிருந்து ஈரானின் இராணுவ அமைப்பான இஸ்லாமியப் புரட்சிகரக் காவலர் படை (IRGC) சுங்க கட்டணமாக பிட்காயின் மற்றும் சீன யுவான் கேட்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து தி வால் ஸ்ட்ரீட் வெளியிட்டுள்ள செய்தியில், முன் அனுமதி இல்லாமல் செல்லும் கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட நாட்களின் மட்டுமே சில கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அதேபோல் பைனான்சியல் டைம்ஸ் தகவலின் படி, சரக்குகளுடன் செல்லும் எண்ணெய் கப்பல்களுக்கு ஒரு பேரலுக்கு 1 அமெரிக்க டாலர் வரை கட்டணம் விதிக்கப்படலாம். பெரிய சூப்பர் டேங்கர்களுக்கு இது கோடிக்கணக்கில் உயரக்கூடும். காலியாக செல்லும் கப்பல்களுக்கு சலுகை இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈரான் விதிக்கும் முக்கிய நிபந்தனைகள்:**

கப்பல் விவரம் மற்றும் சரக்கு பற்றிய முன் தகவல் அளிக்க வேண்டும்

கட்டணம் பிட்காயின் அல்லது சீன யுவானில் முன்கூட்டியே செலுத்த வேண்டும்

'நட்பு' நாடுகளின் சரக்குகள் விரைவாக அனுமதி பெறும்

மற்ற கப்பல்களுக்கு கட்டுப்பாடு அல்லது மறுப்பு இருக்கலாம்

ஈரான் அதிகாரிகளின் அனுமதி அவசியம்

கடல் கண்ணிவெடிகள் காரணமாக ஈரான் கரைக்கு அருகிலான குறிப்பிட்ட பாதையில் மட்டுமே பயணம் செய்ய வேண்டும்

ஏன் பிட்காயின், யுவான்?

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடைகள் காரணமாக, டாலரில் பரிவர்த்தனை செய்வது ஈரானுக்கு கடினமாகியுள்ளது. அதனால் மாற்று வழியாக Bitcoin மற்றும் சீன யுவான் பயன்படுத்தப்படுகின்றன. இது உலக எரிசக்தி வர்த்தகத்தில் மேற்கத்திய ஆதிக்கத்தை பாதிக்கக்கூடும் என்ற கவலையும் எழுந்துள்ளது.

**போர்நிறுத்தம் இன்னும் பதற்றம்**

அமெரிக்க அதிபர் டிரம்ப் இரண்டு வார போர்நிறுத்தத்தை அறிவித்த நிலையில், ஹோர்முஸ் கடல்சந்தி மீண்டும் திறக்கப்பட்டது. உலக எண்ணெய் வர்த்தகத்தின் சுமார் 20% இங்கு நடைபெறுகிறது என்பதால் இது மிகவும் முக்கியமானது.

ஆனால் போர்நிறுத்தம் இருந்தாலும் பதற்றம் முழுமையாக குறையவில்லை. சமீபத்தில் லெபனான் பகுதியில் வான்தாக்குதல்கள் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, பிப்ரவரி 28 முதல் இந்த கடல்சந்தி மூடப்பட்டதால் உலக எண்ணெய் விலைகள் அதிகரித்திருந்தன. தற்போது மீண்டும் திறக்கப்பட்டாலும், பாதுகாப்பு சிக்கல்கள் மற்றும் இராணுவ பதற்றம் தொடர்கிறது.

# தவெக தலைவர் விஜய்யின் வாகனத்தில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை!



காரைக்குடி, ஏப். 10–

காரைக்குடி செல்லும் வழியில் திருப்பத்தூர் அருகே எஸ்.எஸ்.கோட்டை பகுதியில் தவெக தலைவர் விஜய்யின் வாகனத்தை நிறுத்தி தேர்தல் பறக்கும் படையினர் சோதனை நடத்தினர். பறக்கும் படையினரின் சோதனைக்கு விஜய் முழு ஒத்துழைப்பு வழங்கினார். இதனைத்தொடர்ந்து நடைபெற்ற சோதனையில் பணம், பரிசுப்பொருட்கள் உள்ளிட்ட சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் இல்லாததால் அவரது காரை அங்கிருந்து செல்ல அதிகாரிகள் அனுமதித்தனர். பின்னர் விஜய் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

# டெட் தகுதி தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள்!




சென்னை, ஏப். 10–

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்ற கூடியவர்கள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2015 செப்டம்பர் 1–ந் தேதி அல்லது அதற்கு முன்னர் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணி செய்து வரும் ஆசிரியர்கள் இத்தேர்வினை கட்டாயம் எழுத வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப பதிவு ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் கடந்த பிப்ரவரி மாதம் 18–ந் தேதி தொடங்கியது. இதைத் தொடர்ந்து பணியில் உள்ள ஆசிரியர்கள் டெட் தேர்வுக்கு விண்ணபித்து வருகின்றனர். விண்ணப்பிக்க கூடிய கால அவகாசம் இன்றுடன் நிறைவு பெறுகிறது. அதனால் இதுவரையில் விண்ணப்பிக்காத ஆசிரியர்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கல்வித் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். டெட் தகுதித் தேர்வு ஜூலை 4, 5 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இதற்கான விண்ணப்பத் திருத்தங்களை நாளை முதல் 13–ந் தேதி வரை திருத்திக் கொள்ளலாம்.



# முடிவுக்கு வரும் சனி அஸ்தமனம் - கவனமாக இருக்க வேண்டிய ராசிகள்!



ஒரு கிரகத்தின் அஸ்தமனம் என்பது, சூரியனுக்கு மிக நெருக்கமாக பயணித்து, அதன் ஒளியால் தனது சக்தியை இழப்பது அல்லது பலவீனம் அடையும் நிலையை குறிக்கிறது. அந்த வகையில் கடந்த மார்ச் 13 தொடங்கி தனது அஸ்தமன நிலையை சந்தித்து வந்த சனி பகவான், வரும் ஏப்ரல் 15–ஆம் நாள் அஸ்தமன நிலையில் இருந்து விடை காண்கிறார். 33 நாட்கள் நீடிக்கும் இந்த அஸ்தமன நிலைக்கு பின், குறிப்பிட்ட ஒரு சில ராசியினர் தங்கள் ஆளுமை பண்புகளில் மாற்றம் காணலாம், எதிர்மறையான விளைவுகளையும் சந்திக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

மீன ராசியில் தற்போது சஞ்சாரம் செய்து வரும் சனி பகவான், தனது பயணத்திற்கு இடையே கடந்த மார்ச் 13–ஆம் நாள் அஸ்தமன நிலையை அடைந்தார். தொடர்ந்து வரும் ஏப்ரல் 15–ஆம் நாள் அஸ்தமன நிலையில் இருந்து விடை பெறுகிறார். இதன் தாக்கம் மேஷம் முதல் மீனம் வரை உள்ள அனைத்து ராசியினர் வாழ்க்கையிலும் பிரதிபலிக்கும் என நிபுணர்கள் கணித்துள்ளனர். அந்த வரிசையில் ரிஷபம், கன்னி, கும்பம் மற்றும் மீனம் ஆகிய 4 ராசியினருக்கு எதிர்மறையான பலன்களை கொண்டு வரும், குறிப்பாக தொழில் வாழ்க்கையில் சவால்களை அதிகரிக்கும் என நிபுணர்கள் கணித்துள்ளனர். அது தொடர்பான விரிவான பலன்களை இங்கு நாம் காணலாம்!

**ரிஷபம் – தொழில் வளர்ச்சி பாதிக்கும்!**

ரிஷப ராசியில் பிறந்தவர்களின் ஜாதகத்தில் 3–வது வீட்டில் தாக்கத்தை கொண்டு வரும் இந்த சனி எழுச்சி, அவர்களின் தொழில் வாழ்க்கையில் சவால்களை அதிகரிக்கும். அதாவது, உங்கள் இலக்குகளை அடைவதில் கால தாமதம் உண்டாக்கும், நிலுவையில் இருக்கும் பணிகளை முடிப்பதில் மேலும் சிரமங்களை உண்டாக்கும். நிதி சார்ந்த பிரச்சனைகளை கொண்டு வரும், உடன் பிறந்தவர்கள் உடன் நீடித்து வந்த பிரச்சனைகள், மனஸ்தாபங்களும் மேலும் அதிகரிக்கும். தெளிவான முடிவுகளை எடுப்பதில் சிக்கல் உண்டாகும், குழப்பங்களும் நீடிக்கும். உலோகம் சார்ந்த பணிகளை செய்து வரும் நபர்கள் – எதிர்பாராத விபத்தை சந்திக்கலாம்.

கூடுதல் பொறுப்பு கிடைக்கும், இந்த பொறுப்புகள் உண்மையில் உங்கள் வாழ்க்கையில் அலைச்சலை அதிகரிக்கும். முன்னெச்சரிக்கையுடன் இருங்கள்! (பரிகாரம்: ஹனுமன் மந்திரத்தை முறையாக உச்சரித்து வாருங்கள்)

**கன்னி – எச்சரிக்கை**

கன்னி ராசியில் பிறந்தவர்களின் ஜாதகத்தில் 7–ஆம் வீட்டில் மாற்றத்தை கொண்டு வரும் இந்த பெயர்ச்சி, அவர்களின் திருமண வாழ்க்கையில் தடைகளை அதிகரிக்கிறது. குறிப்பாக, திருமணம் முடிக்காத நபர்களின் வாழ்க்கையில் உறவினர்கள் வழியே பிரச்சனைகளை கொண்டு வருகிறது. காதல் உறவிலும் மனஸ்தாபங்களை கொண்டு வரலாம்.

உறவுகளுக்கு இடையே கருத்து வேறுபாடு, கருத்து மோதல்கள் காணப்படும். திருமணம் முடித்து, சிறு குழந்தையின் பெற்றோராக இருக்கும் நபர்கள் தங்கள் குழந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. அதேபோன்று வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

பண விஷயத்திலும் எச்சரிக்கையாக இருங்கள். நண்பர்களுக்கு பணத்தை கடனாக அளிப்பது கூடாது. (பரிகாரம் – சுந்தரகாண்டத்தை பாராயணம் செய்யுங்கள்; செய்யும் செயலுக்கு முன் ஹனுமனை வேண்டுங்கள்)

**கும்பம் – ஆரோக்கிய பிரச்சனைகள்!**

கும்ப ராசியில் பிறந்தவர்கள் ஜாதகத்தில் 12–ஆம் வீட்டில் தாக்கத்தை உண்டாக்கும்; இதன் விளைவு அவர்களின் நெடு நாள் ஆசைகளை பாதிக்கும். குறிப்பாக, வெளிநாட்டு பயணங்கள் தொடர்பான விஷயங்களில் கவனமாக இருங்கள், உங்கள் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும் விஷயங்களில் இருந்து விலகி இருங்கள்.

தனிமையை விரும்பும் நபர்கள், தனிமையில் பயணம் செய்ய விரும்பும் நபர்கள், தங்கள் உள்ளுணர்வுகளுக்கு மதிப்பு அளிப்பது அவசியம். மடிக்கணினியில் அதிக நேரம் பணியாற்றும் நபர்கள், தங்கள் பணிகளுக்கு இடையே போதுமான ஓய்வு எடுத்துக்கொள்வதும் அவசியம்.

பள்ளி செல்லும் மாணவர்கள், ஆசிரியர்களுடன் இணக்கமான உறவை பராமரிப்பது நல்லது – தேவையற்ற விஷயங்களில் தலையிடாமல் இருப்பதும் நல்லது. (பரிகாரம் – சனிக்கிழமையன்று கருப்பு நிறப் பொருட்களை தானம் செய்து வருவது நல்லது)

**மீனம் – அதிகம் உழைக்க வேண்டி இருக்கும்!**

மீன ராசியில் பிறந்தவர்களின் ஜாதகத்தில் லக்ன வீட்டில் நிகழும் இந்த கிரக நிலை மாற்றம், அவர்களை கடுமையாக உழைக்க தூண்டுகிறது. சவால் நிறைந்த பணிகளை கொண்டு வருகிறது, பணிகளை விரைவாக செய்ய விடாது தவிக்க வைக்கிறது. கணிசமான போராட்டங்களை சந்திக்க வேண்டி இருக்கும், உங்கள் பணிகளை முடிக்க நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு எதிர்பார்க்க வேண்டி இருக்கும்.

உடல் ஆரோக்கியம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அரசு பணி எதிர்பார்த்து காத்திருக்கும் நபர்களுக்கு, காத்திருப்பு நீடிக்கும். எழுத்து, ஊடகம், இலக்கியம் தொடர்பான பணியில் இருக்கும் நபர்கள் தங்கள் பணியிடத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது! (பரிகாரம் – சனிக்கிழமையன்று அரச மரத்தின் முன் நெய் தீபம் ஏற்றி, உங்கள் இஷ்ட தெய்வத்தை வணங்கி வாருங்கள்).

# அறிவிப்பு

மதுரை–7, K. புதூர், சூர்யா நகர், தாய்மூகாம்பிகை நகர், கதவு எண். 4 ல் வசித்து வரும் பாலகிருஷ்ணன் நாயர் மகளும் மற்றும் B.ரவி என்பவரின் மனைவியும்மான R. உஷா தேவி (ஆதார் எண் : 9611 1745 9501) என்பவர் எனக்கு கொடுத்த தகவலின் பேரில் கொடுக்கும் முக்கிய அறிவிப்பு என்னவென்றால்:–

மதுரை 625107, மதுரை கிழக்கு வட்டம் உத்தங்குடி வளர்நகர் மெயின் ரோடு ஸ்ரீ குருநகர் கதவு எண் 84 /2 B என்ற முகவரியில் வசித்து வரும் திரு. சுப்பையன் மகன் S. மனோகரன் (ஆதார் எண் 2563 9735 9861 Cell No. 9994415108) என்பவரிடம் இருந்து கீழ் கண்ட சொத்து விபரத்தில் கண்டுள்ள ஆவண எண்: 2121/2024 உள்ள சொத்தின் சர்வே எண் 51/1 A மேற்படி கட்டுப்பட்ட செண்ட் 34.39 புஞ்சை நிலம் பட்டா எண் 1131 ம் மற்றும் சர்வே எண் 50/3A ல் பட்டா எண் 1131 ல் கண்ட புஞ்சை செண்ட் 14.79 நிலம் உள்ள சொத்தும் மேற்படி புஞ்சை சர்வே எண்கள் உள்ள சொத்தானது மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், மேலூர் கிழக்கு சார்பதிவாளர் அலுவலகம், மற்றும் மேலூர் வட்டம் பனங்காடி கிராமத்தில் உள்ள மனைகளாக பிரிக்கப்பட்ட புஞ்சை நிலமாக உள்ளது. மொத்த இரண்டு இலக்க செண்ட் 49.18 புஞ்சை மனை நிலம்.

ஆகவே மேற்கண்ட ஆவண எண்: 2121/2024 ல் கட்டுப்பட்ட சொத்தை மேற்படி எனது கட்சிக்காரர் இந்த அறிவிப்பு செய்த 10 நாட்களுக்குள் இந்த சர்வே எண்கள், பட்டா எண்கள் கொண்ட சொத்தை கிரயம் செய்யவுள்ளார்கள் என்றும், இதில் ஏதேனும் ஆட்சேபனை செய்ய உள்ளவர்கள் யாரேனும் உயில், மற்றும் தான செட்டில் மெண்ட் வில்லங்கள் உள்ளது என்று தெரிவிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் எனது கட்சிக்காரரை கிரயம் செய்த பின்பு எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும்.

இந்த ஆட்சேபனையை எனக்கோ எனது கட்சிக்காரர் B.ரவி cell No: 80728 76675 அவர்களுக்கோ தெரிவிக்க வேண்டியது என்றும் இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

**M.A. முகம்மது இப்ராகிம்**
அட்வகேட் / நோட்டரிபப்ளிக்
சூர்யா நகர்,K. புதூர்
மதுரை –7
Cell; 94433 20503.

# அறிவிப்பு

மதுரை–7, K. புதூர், சூர்யா நகர், தாய்மூகாம்பிகை நகர், கதவு எண். 4 ல் வசித்து வரும் பாலகிருஷ்ணன் மகன் B.ரவி ஆதார் எண் : 8525 1448 1074 என்பவர் எனக்கு கொடுத்த தகவலின் பேரில் கொடுக்கும் முக்கிய அறிவிப்பு என்னவென்றால் :–

மதுரை 625107ல் மதுரை கிழக்கு வட்டம் உத்தங்குடி வளர்நகர் மெயின் ரோடு ஸ்ரீ குருநகர் கதவு எண். 84 /2 B என்ற முகவரியில் வசித்து வரும் திரு. சுப்பையன் மகன் S. மனோகரன் மற்றும் அவரது மனைவி M. ரம்யா (cell :99944 151081) இருவரிடமிருந்து கீழ் கண்ட சொத்து விபரத்தில் கண்டுள்ள ஆவண எண்: 680/2024 உள்ள சொத்தின் சர்வே எண் 3/1 B3 மேற்படி கட்டுப்பட்ட செண்ட் 51.12 புஞ்சை நிலம், பட்டா எண் 702 ம் மற்றும் பட்டா எண் 4/1A ல் சர்வே எண் 703 ல் கண்ட புஞ்சை செண்ட் 19.72 நிலம் உள்ள சொத்தும் மேற்படி புஞ்சை சர்வே எண்கள் உள்ள சொத்தானது மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், மேலூர் கிழக்கு சார்பதிவாளர் அலுவலகம், மற்றும் மேலூர் வட்டம் அரசப்பன்பட்டி கிராமத்தில் உள்ள மனைகளாக பிரிக்கப்பட்ட புஞ்சை நிலமாக உள்ளது.


ஆகவே மேற்கண்ட ஆவண எண்: 680/2024 ல் கட்டுப்பட்ட சொத்தை மேற்படி எனது கட்சிக்காரர் இந்த அறிவிப்பு செய்த 10 நாட்களுக்குள் இந்த சர்வே நம்பர்கள் பட்டா எண்கள் உள்ள சொத்தை கிரயம் செய்யவுள்ளார்கள் என்றும், இதில் ஏதேனும் ஆட்சேபனை செய்ய உள்ளவர்கள் யாரேனும் உயில், மற்றும் தான செட்டில் மெண்ட் வில்லங்கள் உள்ளது என்று தெரிவிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் எனது கட்சிக்காரரை கிரயம் செய்த பின்பு எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும். மொத்த இரண்டு இலக்க செண்ட் 7.84 புஞ்சை மனை நிலம்.

இந்த ஆட்சேபனையை எனக்கோ எனது கட்சிக்காரர் B.ரவி cell No: 80728 76675 அவர்களுக்கோ தெரிவிக்க வேண்டியது என்றும் இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

**M.A. முகம்மது இப்ராகிம்**
அட்வகேட் / நோட்டரிபப்ளிக்
சூர்யா நகர்,K. புதூர்
மதுரை –7
Cell; 94433 20503.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

## இரவில் இந்த பழங்களை சாப்பிடுவது விஷத்திற்கு சமம்..!



உடல் நலத்திற்குப் பழங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதைத் தனியாகக் குறிப்பிடத் தேவையில்லை. இருப்பினும், பழங்களை உட்கொள்ளும் நேரமும் அதே அளவு முக்கியமானது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். குறிப்பாக, சில வகை பழங்களை இரவில் உட்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. அப்படியென்றால், அந்தப் பழங்கள் யாவை? அவற்றை இரவில் சாப்பிட்டால் என்னென்ன பிரச்சனைகள் ஏற்படலாம்? இப்போது விவரங்களைத் தெரிந்துகொள்வோம்.

வாழைப்பழம்: வழக்கமாக, பலர் இரவு உணவிற்குப் பிறகு வாழைப்பழங்களைச் சாப்பிடுகிறார்கள். ஆனால் இது நல்லதல்ல என்று நிபுணர்கள் கூறுகின்றனர். வாழைப்பழங்களில் பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் உள்ளன. அவற்றை இரவில் சாப்பிடக்கூடாது. இந்தப் பழம் மெலடோனின் ஹார்மோனை அதிகரிக்கிறது. இரவில் இதைச் சாப்பிடுவது தூக்கத்தைக் கெடுக்கக்கூடும். வாயுத்தொல்லை, வயிறு உப்புசம் மற்றும் மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம்.

தர்பூணி: தர்பூசணியில் அதிக நீர்ச்சத்து உள்ளது. அது உடலைக் குளிர்ச்சியடையச் செய்கிறது. இரவில் தர்பூசணி சாப்பிடுவது சளி பிடிக்கக் காரணமாகும். மேலும், அது அஜீரணம், வயிற்று உப்புசம் மற்றும் வாயுத் தொல்லை போன்ற பிரச்சனைகளையும் உண்டாக்கும். இரவில் அடிக்கடி சிறுநீர் கழிப்பது தூக்கத்தைக் கெடுக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

திராட்சை: திராட்சையில் சர்க்கரைச்சத்து அதிகமாக உள்ளது. இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் பசி எடுக்கும். உங்கள் வயிறு விரைவில் நிரம்பிவிடும். இரவில் திராட்சை சாப்பிடுவது உங்கள் சரிமான மண்டலத்தின் மீதான அழுத்தத்தை அதிகரிக்கிறது. அது அஜீரணப் பிரச்சனைகளை ஏற்படுத்தும்.

ஆரஞ்சு: ஆரஞ்சுப் பழங்களில் சிட்ரிக் அமிலம் உள்ளது. அது உடலில் வெப்பத்தை அதிகரிக்கிறது. இந்தப் பழத்தை இரவில் சாப்பிடுவது அமிலத்தன்மையை ஏற்படுத்துகிறது. இது வயிற்று வலி மற்றும் பிற பிரச்சனைகளையும் உண்டாக்குகிறது.

வெள்ளரிக்காய்: வெள்ளரிக்காய் அதிக நீர்ச்சத்து கொண்ட பழங்களில் ஒன்றாகும். இரவில் உறங்கச் செல்வதற்கு முன் வெள்ளரிக்காய் சாப்பிட்டால், உங்களுக்கு அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியிருக்கும். இது உங்கள் இரவுத் தூக்கத்தைக் கெடுக்கும். மேலும், இது மூளையைப் பாதிக்கிறது.

மாம்பழம்: மாம்பழத்தை இரவிலும் சாப்பிடக்கூடாது. அதில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. இது வயிற்றில் விரைவில் உப்புச உணர்வை ஏற்படுத்தும். இதனால் அஜீரணம் மற்றும் தூக்கக் கலக்கம் ஏற்படலாம்.

குறிப்பு: மேற்கண்ட தகவல்கள் அடிப்படைத் தகவல்களுக்கு மட்டுமே. உடல்நலம் தொடர்பான விஷயங்களில் மருத்துவரின் ஆலோசனையைப் பின்பற்றுவதே சிறந்தது.

# UPI பயனர்களே.. RBI புது ரூல்..!




புதுடெல்லி, ஏப். 10–

இந்தியாவில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், அதனுடன் சேர்ந்து ஆன்லைன் மோசடிகளும் கணிசமாக உயர்ந்துள்ளன. இதை கட்டுப்படுத்த, இந்திய ரிசர்வ் வங்கி (RBI) புதிய விதி முறைகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. UPI அல்லது IMPS மூலம் ரூ.10,000–க்கும் அதிகமான தொகையை அனுப்பும் போது, அந்தப் பரிவர்த்தனை உடனடியாக நிறைவேறாமல், ஒரு மணி நேரம் வரை காத்திருக்க வேண்டியிருக்கும். இந்த ஒரு மணி நேரத்தில் அனுப்புநர், பெறுநர் விவரங்களை மீண்டும் சரிபார்க்கலாம். ஏதேனும் மோசடி சந்தேகம் இருந்தால், பரிவர்த்தனையை ரத்து செய்யும் வாய்ப்பு இருக்கும்.

ஏன் தாமதம்? RBI தரப்பில் கூறப்படுவதாவது, தற்போதைய மோசடிகளில் பெரும்பாலானவை ‘social engineering’ மூலம் நடக்கின்றன. மோசடிக்காரர்கள் பயமுறுத்தல், அவசரம் போன்ற உத்திகள் மூலம் உடனடி பண பரிமாற்றத்தை வற்புறுத்துகிறார்கள். இதனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிந்திக்கும் நேரமே கிடைக்கவில்லை. இதனால்தான், ஒரு மணி நேரத் தாமதம் அவர்கள் சிந்தித்து அந்தப் பரிவர்த்தனையை நிறுத்த உதவக்கூடும்.

இந்திய ரிசர்வ் வங்கி சில தளர்வுகளைப் பரிந்துரைத்துள்ளது. அதாவது இந்த ஒரு மணி நேர கால தாமதம் அனைவருக்கும் பொருந்தாது. இதில், வாடிக்கையாளர்கள் தங்கள் நம்பிக்கைக்குரிய தொடர்புகளை அனுமதிப்பட்டியலில் சேர்ப்பதன் மூலம், அவர்களுக்குப் பணம் அனுப்பும்போது எந்தத் தாமதமும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ளலாம். இந்த விதி வணிகர் கொடுப்பனவுகள் (கடைகளில் செய்யப்படும் கொடுப்பனவுகள்), மின்னணு ஆணைகள், காசோலைகள் மற்றும் NACH பரிவர்த்தனைகளுக்குப் பொருந்தாது.

ரிசர்வ் வங்கியின் புதிய முன்மொழிவின் முக்கிய அம்சங்கள் என்னென்ன?

* ரூ. 10,000–க்கு மேற்பட்ட பரிவர்த்தனைகள் ஒரு மணி நேரத்திற்கு நிறுத்தி வைக்கப்படும், அந்த நேரத்தில் வாடிக்கையாளர் பரிவர்த்தனையை ரத்து செய்யலாம்.
* மூத்த குடிமக்கள், அதாவது 70 வயதுக்கு மேற்பட்டவர்கள், ரூ. 50,000–க்கு மேல் பரிமாற்றம் செய்வதற்கு நம்பகமான ஒருவரின் அனுமதி கட்டாயமாகும்.
* தனிநபர் மற்றும் சிறு வணிகக் கணக்குகளில் வைப்புத்தொகை ரூ. 25 லட்சத்தைத் தாண்டினால், உறுதிப்படுத்திய பின்னரே வங்கி பணத்தை வரவு வைக்கும்.
* வாடிக்கையாளர்கள் தங்களின் அனைத்து டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைச் சேனல்களையும் (UPI, அட்டைதாரர் ஐடி, இணைய வங்கிச் சேவை) ஒரே நேரத்தில் செயலிழக்கச் செய்ய அனுமதிக்கும் ஒரு பொத்தானான ‘கில் ஸ்விட்ச்’ ஒன்றையும் இந்திய ரிசர்வ் வங்கி பரிசீலித்து வருகிறது.



மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்களித்ததை உறுதி செய்யும் ஒப்புகைச் சீட்டு கருவி ஆகிய இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து திருப்பரங்குன்றம், திருமங்கலம் தேர்தல் பொது பார்வையாளர் பார்வையிட்டார்.

# விமான டிக்கெட் விலை குறையுமா? மத்திய அரசு வழங்கிய புது சலுகை!



புதுடெல்லி, ஏப்,. 10–

ஈரான் போர் காரணமாக சர்வதேச அளவில் விமான எரிபொருட்களின் விலை கடுமையான அளவு உயர்ந்துள்ளது. இது விமான சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு அதிக செலவை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக உள்நாட்டு விமான சேவை நிறுவனங்களான இண்டிகோ, ஏர் இந்தியா உள்ளிட்ட நிறுவனங்கள் எரிபொருள் விலை உயர்வால் கடும் நிதி நெருக்கடியை சந்தித்துள்ளன. இதனால் விமான டிக்கெட் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. விமான எரிபொருள்களுக்கு கூடுதல் கட்டணங்களையும் அதிகப்படுத்தின. இது விமான சேவைகளை பயன்படுத்தக்கூடிய மக்களுக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

இந்த சூழலில் உள்நாட்டு விமான சேவை நிறுவனங்களுக்கு ஒரு புதிய சலுகையை மத்திய அரசு வழங்கியிருக்கிறது. விமான நிறுவனங்கள் மேற்கொண்டு டிக்கெட் விலையை உயர்த்தி அவர்கள் மீது நிதி சுமையை போடாமல் இருக்க இந்த நடவடிக்கை உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு விமானங்களுக்கான விமான லேண்டிங் மற்றும் நிறுத்துமிட கட்டணங்களை 25 சதவீதம் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. விமான எரிபொருள் விலை உயர்வு உள்ளிட்ட கூடுதல் செலவுகள் விமான நிறுவனங்களுக்கு அதிக நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளன. இதனால் பல்வேறு நிதி நெருக்கடியை இந்த நிறுவனங்கள் சந்திப்பதாக மத்திய அரசிடம் தொடர்ந்து கோரிக்கை முன்வைத்து வந்தன.

இதன் அடிப்படையில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்து இருக்கிறது. எனவே இந்தியாவில் உள்ள முக்கிய விமான நிலையங்களில் உள்நாட்டு விமானங்களுக்கான லேண்டிங் மற்றும் நிறுத்துமிட கட்டணங்களை 25% குறைக்க இந்திய விமான நிலையங்களின் பொருளாதாரம் ஒழுங்காற்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த கட்டண குறைப்பு உடனடியாக அமலுக்கு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் இந்த சலுகை உள்நாட்டு விமான போக்குவரத்துக்கு மட்டுமே பொருந்தும் என கூறியுள்ளது. முதல் கட்டமாக மூன்று மாதங்களுக்கு இந்த கட்டண குறைப்பு அமலில் இருக்கும் அதன் பிறகு சூழலை பொறுத்து இது மறு பரிசீலனை செய்யப்படும் என அரசு தெரிவித்திருக்கிறது.

இந்த கட்டண குறைப்பால் விமான நிறுவனங்களின் செயல்பாட்டு செலவு குறையும். இது மறைமுகமாக பயணிகளுக்கும் பலனளிக்கும் என சொல்லப்படுகிறது. மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சகம் முன்வைத்த பரிந்துரை ஏற்று இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் விமான சேவை நிறுவனங்களுக்கு 400 கோடி ரூபாய் வரை மிச்சமாகும் என சொல்லப்படுகிறது. இந்த அறிவிப்பால் உடனடியாக டிக்கெட் விலைகள் குறையாது என்றாலும் மேற்காசிய போர் நெருக்கடியால் மேலும் விலை உயராமல் பார்த்து கொள்ளும்.

# மதுரை மாவட்டத்தில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள்; கலெக்டர் தகவல்!

மதுரை, ஏப். 10–

மதுரை மாவட்டத்தில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் திருக்கல்யாணம் மற்றும் அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளுதல் தொடர்பாக மண்டகபடிகளில் மற்றும் இதர இடங்களில் அன்னதானம் வழங்குதல் மற்றும் பக்தர்களால் வழங்கப்படும் பிரசாத உணவுகள், சர்பத், குளிர்பானங்கள், நீர் மோர், இனிப்புகள் மற்றும் குடிநீர் ஆகியவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பாதுகாப்பான உணவாக, செயற்கை சாயங்கள் எதுவும் சேர்க்காமல் வழங்க வேண்டும். மேலும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பாலிதீன் பைகள், பிளாஸ்டிக் கப்புகள் ஆகியவற்றை முழுமையாக தவிர்க்க வேண்டும். மாற்றாக அன்னதானம் வழங்குவதற்கு அல்லது வேறு உணவுப்பொருட்கள் வழங்குவதற்கு வாழை இலை, பாக்கு மட்டை அல்லது தொன்னையில் வழங்கப்பட வேண்டும். உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பொழுது தரமான மூலப்பொருட்கள் கொண்டு தயாரிக்க வேண்டும். மேலும் மூலப்பொருட்களின் தயாரிப்பு தேதி மற்றும் காலாவதி தேதி சரிபார்த்து கொள்ள வேண்டும். அன்னதானம் வழங்குபவர்கள் மற்றும் பெறுபவர்கள் சாப்பிட்ட பின்பு அன்னதானம் வழங்கும் இடங்களில் சேரும் கழிவுகள் முறையாக சேகரித்து மாநகராட்சி குப்பை தொட்டியில் கொண்டு சேர்க்க வேண்டும். அதேபோல் கோடை காலத்தை முன்னிட்டு, அமைக்கப்படும் தற்காலிக குளிர்பான விற்பனை இடங்கள், உணவகங்கள் மற்றும் இலவச குடிநீர் பந்தல்கள் ஆகியவற்றிலும் தரமான குடிநீர் செயற்கை சாயங்கள் அற்ற உணவுகளை விற்பனை செய்ய வேண்டும். திருவிழாவை முன்னிட்டு, மண்டகபடிகள் மற்றும் இலவச அன்னதானம், பிரசாதம், குளிர்பானங்கள், நீர்மோர் மற்றும் குடிநீர் வழங்கும் நபர்கள் https://foscos.fssai.gov.in என்ற இணையதளத்தில் இணைய வழியில் (Online) மூலம் ரூ.100/– கட்டணம் செலுத்தி விண்ணப்பித்து மதுரை மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் அனுமதி (பதிவுச் சான்றிதழ்) பெற்று மட்டுமே வழங்க வேண்டும். தவறும்பட்சத்தில் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006–ன் பிரிவு 58–ன் கீழ் தகுந்த நடவடிக்கை எடுக்க நேரிடும்.

மேலும், உணவு மற்றும் உணவுப் பொருள் தொடர்பான புகார்களுக்கு தமிழ்நாடு அரசு உணவு பாதுகாப்பு துறை கட்செவி (Whatsapp No.) எண்.9444042322–ல் தொடர்பு கொண்டு புகார்கள் தெரிவிக்கலாம் என மதுரை மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அன்னதானம் வழங்குவோர் உணவு பாதுகாப்பு 2640036 பதிவுச்சான்றிதழ் பெறுவதற்கு தேவையான விபரங்களை 0452 அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டும் தெரிந்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சினிமா துளிகள்..!

## துருவ் விக்ரம் நடிக்கும் அடுத்த படம்?



முன்பு மணிரத்னம் இயக்கத்தில் துருவ் நடிக்கப் போகிறார் என்ற தகவல் உதவியது. ஆனால் மணி அடுத்ததாக விஜய் சேதுபதி, சாய் பல்லவி நடிப்பில் படம் இயக்குகிறார் என அறிவிக்கப்பட்டது. இப்போது துருவ் அடுத்தாக தெலுங்கு–தமிழ் என இரு மொழியில் உருவாகும் படத்தில் நடிக்க உள்ளதாக சொல்லப்படுகிறது. அடுத்த படத்திற்காக அவர் தயாராகி வரும் வீடியோவையும் இன்ஸ்ட்டாவில் பதிவிட்டுள்ளார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் இப்படத்தைத் தயாரிக்க உள்ளது எனவும் கரண் அரவிந்த் குமார் இயக்கவுள்ளார் எனவும் சொல்லப்படுகிறது. இதற்கு முன் கரண் அரவிந்த் குமார் ‘ ஆதித்ய வர்மா’ படத்திலும் உதவி இயக்குநராகப் பணியாற்றியுள்ளார் எனவும் சூர்யா நடிப்பில் ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் வெளியான ‘ கருப்பு’ படத்தின் எழுத்தாளர்களில் ஒருவர் எனவும் சொல்லப்படுகிறது.

# வேலை வாய்ப்பு

## 10 ஆம் வகுப்பு.. மத்திய சுங்கத்துறையில் வேலை..!

மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சுங்கத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதில், மொத்தம் 10 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பில் குரூப் ‘C’ பிரிவின் கீழ் டிரேட்ஸ்மேன் (Trades–man), சீமேன் (Seaman), கிரேசர் (Greaser) உள்ளிட்ட பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் தேடப்படுகின்றனர்.


கல்வித்தகுதி: இந்தப் பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் 10–ம் வகுப்பு அல்லது ஐடிஐ (ITI) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

சம்பளம்: தேர்வு செய்யப்படுபவர்களுக்கு மாதம் ரூ. 19,900 முதல் ரூ. 63,200 வரை ஊதியம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பிக்க விரும்புவோர் ஆன்லைன் மூலம் விண்ணப்பப் படிவத்தைப் பெறலாம். அதற்காக சென்னை கஸ்டம்ஸ் அதிகாரப்பூர்வ இணையதளமான https://chennaicustoms.gov.in லிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேவையான ஆவணங்களை இணைத்து, குறிப்பிடப்பட்ட அலுவலக முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி தேதி: விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க 30.04.2026 கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது என்று சுங்கத்துறை தெரிவித்துள்ளது.

# மொபைல் ரீசார்ஜ் கட்டணங்கள் குறையப் போகுது..!




புதுடெல்லி, ஏப். 10–

தற்போது, அனைத்துத் தொலைத்தொடர்பு நிறுவனங்களும் வழங்கும் திட்டங்கள் பெரும்பாலும் இணையத் தரவு (Data) சார்ந்தவையாகவே உள்ளன. இதன் காரணமாக, இணையத்தைப் பயன்படுத்தாதவர்கள் கூடக் கூடுதல் கட்டணம் செலுத்தி, இணையத் தரவு வசதியுடன் கூடிய ரீசார்ஜ் திட்டங்களையே பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால், TRAI தற்போது எடுத்துள்ள இந்த முடிவின் மூலம், இணையத் தரவு வசதி இல்லாமல், அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளை மட்டுமே வழங்கும் குறைந்த கட்டணத் திட்டங்கள் இனி கிடைக்கப்பெறும்.

குரல்வழி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளுக்கு மட்டுமே பிரத்யேகமான கட்டண வவுச்சர்களைத் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கட்டாயம் அறிமுகப்படுத்த வேண்டும் என்று TRAI திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இத்திட்டங்களின் கட்டணங்கள், இணையத் தரவு வசதியுடன் கூடிய திட்டங்களின் கட்டணங்களை விட மிகக் குறைவாக இருக்க வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

இருப்பினும், முந்தைய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட பிறகும், சில நிறுவனங்கள் அத்தகைய ரீசார்ஜ் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தாலும், அவற்றின் கட்டணங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதையும் செய்யவில்லை. இதன் பொருள் என்னவென்றால், இணையத் தரவு வசதி நீக்கப்பட்ட பிறகும், சாமானிய மக்களுக்குப் பெரிய அளவில் எந்தப் பயனும் கிடைக்கவில்லை; மாறாக, தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மட்டுமே இதன் மூலம் பயனடைந்துள்ளன.

இந்த காரணத்தைக் கருத்தில் கொண்டு, ‘தொலைத்தொடர்பு நுகர்வோர் பாதுகாப்பு (13–வது திருத்த) விதிகள், 2026’ என்ற புதிய ஒழுங்குமுறையை TRAI வகுத்துள்ளது. இந்த ஒழுங்குமுறையின்படி, ஒவ்வொரு தொலைத்தொடர்பு சேவை நிறுவனமும், அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளை மட்டுமே வழங்கும் வகையிலான குறைந்தபட்சம் ஒரு திட்டத்தையாவது கட்டாயம் வழங்க வேண்டும் என்பது விதியாக்கப்பட்டுள்ளது. இத்தகைய குறைந்த கட்டணத் திட்டங்கள் நீண்ட காலச் செல்லுபடியாகும் கால அளவோடு மட்டுமல்லாமல், குறைந்த நாட்கள் செல்லுபடியாகும் கால அளவிலும் கிடைக்கப்பெற வேண்டும் என்றும் TRAI அறிவுறுத்தியுள்ளது.

TRAI அறிமுகப்படுத்தியுள்ள இந்தப் புதிய விதிகளின் மூலம் சாமானிய மக்கள் பெரும் நிவாரணம் பெறுவார்கள். இணையத் தேவை இல்லாத முதியவர்களுக்கும் கிராமப்புறப் பயனர்களுக்கும் இது மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும், பயனர்கள் தாங்கள் விரும்பும் சேவைகளை மட்டுமே தேர்ந்தெடுத்துப் பெறும் வாய்ப்பையும் இது வழங்கும். அத்துடன், இந்தத் திருத்தமானது தொலைத்தொடர்பு சந்தையில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும், ஆரோக்கியமான போட்டியை வளர்க்கவும் உதவும். இதன் விளைவாக, பயனர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, நிறுவனங்கள் புதிய வகையான திட்டங்களை உருவாக்க வேண்டிய சூழல் ஏற்படும்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881






# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## தவெகவுக்கு வாக்களித்ததை வீடியோ எடுத்து பதிவிட்ட நபர் மீது நடவடிக்கை; தேர்தல் அதிகாரி அதிரடி!

புதுச்சேரி, ஏப். 10–

புதுச்சேரி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடந்தது. அப்போது வாக்குச்சாவடிக்குள் செல்போன் எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. செல்போனை வாக்குச்சாவடிக்கு வெளியே வைத்து பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக தன்னார்வலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.



இந்த நிலையில் தேர்தல் துறையின் உத்தரவை மீறி சிலர் செல்போனை வாக்குச்சாவடிக்குள் எடுத்து சென்று த.வெ.க.வுக்கு விசில் சின்னத்தில் தங்களது வாக்குகளை பதிவு செய்தல், .வி.பாட் எந்திரத்தில் விசில் சின்னம் வருவது வரை வீடியோவாக செல்போனில் படம் பிடித்துள்ளனர்.

அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர். இது தற்போது சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது. இது குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட கலெக்டருமான குலோத்துங்கனிடம் புகார் தெரிவிக்கப்பட்டது. அவர் இது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

## அண்ணாமலை சென்ற ஹெலிகாப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை!

உதகை, ஏப். 10–

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் ஒருசில நாட்களே இருக்கும் நிலையில், அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், உதகை தொகுதி பாஜக வேட்பாளர் போஜரா ஜனை ஆதரித்து முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை பரப்புரையில் ஈடுபட வந்தார்.

இதற்காக உதகைக்கு அண்ணாமலை வந்த ஹெலிகாப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை நடத்தினர். இந்த சோதனைக்கு அண்ணா மலை முழு ஒத்துழைப்பு அளித்தார்.





இந்த சோதனைக்கு பின்னர் பறக்கும் படையினர் அங்கிருந்து புறப்பட்டு சென்றனர்.



2026 சட்டமன்ற தேர்தலுக்கான வாக்கு சேகரிப்பு தீவிரமாக நடைபெற்று வருகிறது. புதுக்கோட்டை உழவர் சந்தைக்கு உட்பட்ட பகுதிகளில் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் முத்துராஜா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது திமுக அரசின் நலத்திட்டங்களை எடுத்துக் கூறி பெண்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.



தேனி மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறைசார்பில் விளையாட்டுவீரர்கள் வீராங்கனைகள், கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்ட100 சதவீதம் வாக்குபதிவு விழிப்புணர்வு நடைபயணபேரணியை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தொடங்கிவைத்து மாவட்ட தேர்தல் அலுவலர் ரஞ்ஜித்சிங் நடைபயணத்தில் கலந்துகொண்டார்.

## பெரம்பலூர் அருகே குன்னம் தொகுதியில் வாக்குகள் சேகரித்த வேட்பாளர் சா.சி.சிவசங்கர்.

பெரம்பலூர், ஏப்.10–

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதியில் திமுக வேட்பாளரான அமைச்சர் சிவசங்கர் உதயசூரியன் சின்னத்திற்கு தனது மதசார்பற்ற கூட்டணி கட்சியினருடன் சென்று வேப்பூர் ஒன்றியத்தில் வாக்குகள் சேகரித்தார். அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்து வெற்றி திலகமிட்டு வரவேற்றனர். வாக்குகள் சேகரித்த போது திமுக மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஒன்றிய செயலாளர்கள் மதியழகன், அழகு.நீலமேகம், ராஜேந்திரன், முன்னாள் சேர்மன் பிரபா செல்லப்பிள்ளை உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.



## விஜய் பயணத்தில் தொடரும் விபத்துகள்!

மதுரை, ஏப். 10–

விஜய் பிரசார வாகனத்தில் காரைக்குடிக்கு சென்று கொண்டிருந்தார். அவரின் பிரசார வாகனத்தை அவரது தொண்டர்கள், ரசிகர்கள் என பலரும் பின் தொடர்ந்து பைக்கில் சென்றுகொண்டிருந்தனர்.

மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சென்றபோது விஜய் பிரசார வாகனத்தை பின் தொடர்ந்து பைக்கில் சென்றபோது இரு இளைஞர்கள் விபத்தில் சிக்கினர். இளைஞர்கள் சென்ற பைக் சாலை தடுப்புச்சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படுகாயமடைந்த 2 இளைஞர்களும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## விஜய் முதிர்ச்சியற்ற அரசியல்வாதி: டி.கே.சிவக்குமார்!

சென்னை, ஏப். 10–

விஜய் முதிர்ச்சியற்ற அரசியல்வாதி என கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் கூறியுள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பிறகு நிருபர்களிடம் டி.கே. சிவக்குமார் கூறியதாவது: டி.கே.சிவக்குமார் கூறியதாவது: தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க சொன்னாலும், மாநில கட்சிகள் வலிமையாக இருக்க வேண்டும் என காங்கிரஸ் திமுக விரும்புகின்றன. ஒட்டு மொத்த நாட்டையும் நிலையற்றதாக்க விரும்பவில்லை. நம்மை பிரிக்க வேண்டும் என நினைக்கின்றனர். நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என விரும்புகிறோம். விஜய் முதிர்ச்சியற்ற அரசியல் வாதி. அவருக்கு அரசியல் முதிர்ச்சி என்றால் என்னவென தெரியாது. அவருடன் திரிணமுல் காங்கிரஸ் கட்சி மட்டுமே இருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

காங்கிரஸ் அவருடன் இல்லை. தமிழகத்தில் திமுக உடன் தான் காங்கிரஸ் நிற்கிறது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் திமுக காங்கிரஸ் வெற்றி பெறும். இவ்வாறு டி. கே.சிவக்குமார் கூறினார்.







புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி தெற்கு ஒன்றியம் பகுதியில் உள்ள வாரப்பட்டு ஊராட்சி திருக்களம்பூர் ஊராட்சி கருப்புகுடிப்பட்டி , ஊத்துக்குளி,கொள்ளுபட்டு உள்ளிட்ட கிராம பகுதிகளில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் அமைச்சருமான ரகுபதி மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அப்போது அதிமுக உள்ளிட்ட மாற்றுக்கட்சியினர் திருமயம் தொகுதி திமுக வேட்பாளரும், அமைச்சருமான ரகுபதி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். அவர்களுக்கு சால்வை அணிவித்து அமைச்சர் ரகுபதி வரவேற்றார்.

## விஜய் பிரசாரத்தால் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரசாரத்திற்கு அனுமதி மறுப்பு!

சென்னை, ஏப். 10–

கடலூரில் ஏப்.11–ல் விஜய் பிரசாரம் செய்ய உள்ள நிலையில், துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் நாளைய பிரசாரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறைகளின்படி முதலில் யார்விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விஜய் முதலில் அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திட்டக்குடி, நெய்வேலி, வடலூரில் நாளை பிரசாரம் செய்ய உதயநிதி ஸ்டாலின் அனுமதி கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. உதயநிதி ஸ்டாலின் பிரசாரம் வேறொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.







ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெல்லும் வேட்பாளர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சு. முத்துச்சாமி 18ஆவது வட்டத்தில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பொதுமக்கள் வழி நெடுக ஆராத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்றனர். இந்த நிகழ்ச்சியில் துணை மேயர் வி செல்வராஜ், மண்டல தலைவர் மு ப. சுப்பிரமணியன், மாமன்ற உறுப்பினர் ஆ. ஜெகதீசன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க.வேட்பாளராக போட்டியிடும் ஆ.மகாராஜன் எம்.எல்.ஏ ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள தர்மத்துப்பட்டி, அணைக்கரைப் பட்டி,புலிமான்கோம்பை, மூணாண்டிபட்டி, சில்க்குவார்பட்டி உள்பட 18 கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், மாவட்ட இளைஞ்யர் அணிஅமைப்பாளர் செஞ்சூரி செல்வம், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அர்ச்சுணன், எஸ். டி.சிவா மற்றும் தி.மு.க.நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.

## ராமதாஸ் தரப்புக்கு சிலிண்டர் சின்னம் ஒதுக்கீடு!

சென்னை, ஏப். 10–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வருகிற 23–ந்தேதி நடைபெற இருக்கிறது. தேர்தலில் பதிவாகும் வாக்குகளின் எண்ணிக்கை அடுத்த மாதம் (மே) 4–ந்தேதி நடைபெற உள்ளது. டாக்டர் ராமதாஸ், சசிகலா புதிதாக தொடங்கிய அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்துடன் கூட்டணி அமைத்து வருகிற சட்டமன்ற தேர்தலை சந்திக்க உள்ளார். அன்புமணி ராமதாசுக்குதான் பா.ம.க.வின் பெயரை பயன்படுத்தவும், மாம்பழம் சின்னத்தை ஒதுக்கவும் அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.



ராமதாஸ் கடந்த மாதம் அய்யா பாமக எனும் புது கட்சியை தொடங்கினார். ராமதாஸ் தரப்பில் சட்டசபை தேர்தலில் 30 தொகுதிகளில் தனது ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். இவர்கள் அனைவருக்கும் தேர்தல் ஆணையம் சிலிண்டர் சின்னம் ஒதுக்கியுள்ளது. அய்யா பாமகவின் 30 வேட்பாளர்களுக்கும் சிலிண்டர் சின்னத்தில் வாக்களிக்குமாறு ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




திண்டுக்கல் கோபால் நகரில் நடைபெற்ற பிரசாரத்தில் திண்டுக்கல் சீனிவாசன் குற்றச்சாட்டு உள்ளூரில் விலை போகாத மாடு எப்படி வெளியூரில் விலை போகும். பழனி தொகுதியில் இருந்து திண்டுக்கல் தொகுதிக்கு மாற்றப்பட்ட திமுக வேட்பாளர் ஐ பி செந்தில்குமார் மீது அதிமுக வேட்பாளர் சீனிவாசன் குற்றச்சாட்டு .



மரியநாதபுரம், தேவசகாய நகரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திண்டுக்கல் தொகுதி வேட்பாளர் மானமிகு. I.P. செந்தில் குமார் அவர்களை ஆதரித்து திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பரப்புரை மேற்கொண்டார்.

## பெரம்பலூர் அருகே திமுக வேட்பாளர் ஜெயலட்சுமி கட்சியினருடன் சென்று தீவிர வாக்குகள் சேகரித்தார்!




பெரம்பலூர், ஏப்.10–

பெரம்பலூர் மாவட்ட திமுக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோரது தலைமையில், பெரம்பலூர் ஒன்றிய திமுக செயலாளர் எம்.இராஜ்குமார் முன்னிலையில், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ஜெயலெட்சுமி நேற்று சிறுவாச்சூர் கிராமத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். இதில் பொதுக்குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார் மற்றும் காங்கிரஸ்,,ம.தி.மு.க.தேசிய முற்போக்கு திராவிட கழகம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் திமுக மாவட்ட மகளிரணி மாவட்ட அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் உள்ளிட்ட பலர் உடன் சென்றிருந்தனர். முன்னதாக, வாக்குகள் சேகரிக்க சென்ற வேட்பாளர் ஜெயலட்சுமி, திமுக அரசின் தேர்தல் அறிக்கையையும், திமுக ஆட்சியின் சாதனைகளையும் எடுத்துக் கூறி வாக்குகள் சேகரித்தார்.

பெரம்பலூர் ஒன்றியத்தில் உள்ள கவுல்பாளையம், நெடுவாசல், க.எறையூர், கல்பாடி, எறையசமுத்திரம், அ.குடிகாடு, அய்யலூர், சிறுவாச்சூர், விளாமுத்துர், நொச்சியம், செல்லியம்பாளையம், புதுநடுவலூர், வெள்ளனூர், மேட்டூர், ரெங்கநாதபுரம், தம்பிரன்பட்டி, கீழக்கணவாய், புது வேலூர், வேலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி ஆகிய கிராமங்கில் தீவிர வாக்குகள் சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது, திமுக மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஸ்குமார் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி காஞ்சிபுரம், திருவள்ளூரில் பிரசாரம்!

சென்னை, ஏப். 10–

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி காஞ்சிபுரம், திருவள்ளூரில் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். அதிமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

இதனிடையே, தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர்களின் வேட்பு மனுக்கள் பரீசிலிக்கப்பட்டு இறுதி வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.



Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020